# சந்தன மரங்களைப் பாதுகாக்கும் சிலிக்கான் சிப்!

'ஊர்ல கல்யாணம், மார்ல சந்தனம்'னு சொல்வாங்க. இதுக்கு என்ன அர்த்தம்னு, இப்போ உள்ள தலைமுறைக்குத் தெரியாது. ஏதோ கேலி, கிண்டல்னுகூட நினைச்சுக்குவாங்க. ஆனா, இந்த முதுமொழியில பல விஷயங்கள் அடங்கியிருக்கு. அந்தக் காலத்துல கல்யாண வீட்டு நுழைவாயில, சந்தனத்தைக் குலைச்சு வெச்சுக்கிட்டு ரெண்டு பேர் நிப்பாங்க. ஆண்கள் உள்ளே நுழைஞ்சவுடன், மார்பிலயும் ரெண்டு கைகள்லயும் சந்தனத்தைப் பூசிவிடுவாங்க. அப்போல்லாம் மார்புல சந்தனம் இருந்தாதான், கல்யாணத்துக்குப் போயிட்டு வந்ததுக்கு அடையாளம். இது வெறும் சடங்கு மட்டுமில்லீங்க. சந்தனத்தை உடம்புல பூசிக்கிட்டா, உற்சாகம் பிறக்கும், உடம்புல சூடு குறையும். தோல் நோய்கள் வராது. தோல் சுருக்கம் ஏற்படாது.

இதோட தொடர்ச்சியாத்தான், இன்னைக்கும் ரெண்டு பெண்களைக் கல்யாண மண்டபத்து வரவேற்பு பகுதியில நிக்க வெச்சு, பன்னீரையும் சந்தனத்தையும் சின்னச் சின்னக் கிண்ணத்துல வெச்சி வரவேற்கிறோம்.

சந்தனத்தை உடம்பு மேல தேய்ச்சுக்கிட்டா நல்ல பலன் கிடைக்கும்ங்கிற தகவலை டிவி விளம்பரத்தைப் பார்த்தாலே நல்லா புரியும். சந்தனத்தைச் சேர்த்துத்தான், 99 சதவிகித அழகுசாதனப் பொருள்களைத் தயாரிக்கிறாங்க. சித்த மருத்துவமும் ஆயுர்வேத மருத்துவமும் சந்தனத்தை மணக்க மணக்க பயன்படுத்துறாங்க. சித்த மருத்துவத்தை நேர்மையா செய்திட்டிருக்கிற மருத்துவர்கிட்ட பேசும்போது, சந்தனத்தைப் பத்தி முக்கியமான ரகசியத்தைச் சொன்னாரு.

அதாவது, சந்தனத்தைத் தினமும் உணவு பொருள்ல கலந்து சாப்பிட்டு வந்தா, ஓர் ஆண்டுக்குள் முகத்துல சுருக்கம் மறைஞ்சு, தோல் பளபளப்பாகி இளமை திரும்புமாம். நாற்பது வயசுல சாப்பிட்டா, முப்பது வயசு மாதிரி தோற்றப் பொலிவு இருக்கும்னு சொன்னாரு.

இவ்வளவு சிறப்பான சந்தனம் மரத்தோட அருமை பெருமைகளை அசைப்போட்டபடியே, கர்நாடக மாநிலத்தில உள்ள 'சேண்டல்வுட் சொஸைட்டி ஆஃப் இந்தியா' (*Sandalwood Society of India*) சமீபத்துல சென்னை தரமணி பகுதியில உள்ள, எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி மையத்துல நடத்திய 'சந்தனம்-செம்மரம் வளர்ப்பு' பத்தின கருத்தரங்குல கலந்துகிட்டேன். மதிய உணவுக்குப் பிறகு, பாதிபேர் ஊருக்குப் போனாலும், அந்த அமர்வுலதான், பல



முக்கியமான தகவல்கள் பேசப்பட்டது.

கர்நாடக மாநிலத்தோட வனத்துறையின் கூடுதல் முதன்மை வனப்பாதுகாவலர் அனிதா ஐ.எஃப்.எஸ் பேசும்போது, "கர்நாடக மாநிலத்தின் வனத்துறை, சந்தன மரம் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்குப் பலவிதமான உதவிகளைச் செய்து வருகிறது. சந்தன மரம் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்குச் செடிக்கு 100 ரூபாய் மானியம் கொடுக்கிறோம். நடவு செய்தது முதல் மூன்று ஆண்டுகளுக்குத் தொடர்ந்து வழங்கி வருகிறோம். இதன் மூலம் சந்தனமரச் சாகுபடி செய்யும் விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. சாகுபடி மட்டுமல்லாமல், விற்பனை செய்யவும் விவசாயிகளுக்கு வழிகாட்டி வருகிறோம். தமிழ்நாட்டில் உள்ள மேட்டுப்பாளையம் வனக்கல்லூரியின் பரிந்துரைப்படிதான், சந்தனம் உள்ளிட்ட மரப்பயிர்களை விஞ்ஞான ரீதியில் கர்நாடகாவில் சாகுபடி செய்கிறோம். சந்தன மரம் வளர்ப்பில் கர்நாடகாவும் தமிழ்நாடும்தான் முன்னிலையில் உள்ளது. சந்தன மர வளர்ப்பை அதிகமாக




● கருத்தரங்கில்...

முனைவர் கே.டி.பார்த்திபன் பேசும்போது, "சந்தனமரத்தை ராயல்டீ எனப் பெருமையாகச் சொல்கிறார்கள். உண்மைதான், பல ஆண்டுக் காலமாகச் சந்தனமும் செம்மரமும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறோம். செஞ்சந்தன மரத்தை 17-ஆம் நூற்றாண்டிலேயே, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளோம். சந்தன மரம் ஒரு டன் 18,000 தொடங்கி 50,00,000 ரூபாய் வரையிலும் அதிகபட்சமாக விற்பனையாகிறது. செம்மரம் ஒரு டன் 27,00,000 ரூபாய்க்கும் அதிகபட்சமாக விற்பனையாகிறது.

இந்த அளவுக்கு விலைக் கிடைப்பதால், தமிழ்நாட்டில் இந்த இரண்டு மரங்களையும் சாகுபடி செய்யும் விவசாயிகள் அதிகரித்து வருகின்றனர். குறிப்பாகச் செம்மரத்தைச் சாகுபடி செய்யும் விவசாயிகளின் எண்ணிக்கை அதிகம். இந்திய அளவில் நான்கு மாநிலங்களில் சந்தன மரச்சாகுபடி அதிக அளவில் உள்ளது. முதலிடத்தில் கர்நாடகமும், இரண்டாவது இடத்தில் தமிழ்நாடும் உள்ளது. ஆனால், சந்தன மரத்தின் தேவையே ஆண்டுக்கு 100 டன்தான். உற்பத்தி அதிகரித்த வண்ணம் உள்ளது. வாசனை திரவியம், சோப்பு, மருந்து... என 18 தொழில்களுக்கு மூலப்பொருள்களாகச் சந்தனமரம் பயன்படுகிறது. இதிலிருந்து மதிப்புக்கூட்டப்பட்ட பொருள்களை அதிகளவுக்கு உற்பத்தி செய்ய வேண்டும். நமக்குப் போட்டியாக, ஆஸ்திரேலியாவில் சந்தன மரத்தை ஏக்கர் கணக்கில் சாகுபடி செய்து அறுவடைச் செய்யத் தொடங்கிவிட்டார்கள்.

"மரம் எவ்வளவு உயரமாக இருந்தாலும், அதன் தரம்-எடையின் மூலம்தான், அதன் விலை மதிப்பிடப்படுகிறது. எனவே, தரமான கன்றுகளைத் தேர்வு செய்து நடவு செய்வது அவசியம்."

தென்னிந்தியாவில் கேரள மாநிலம், மறையூரில் உள்ள சந்தன மரங்களில்தான், தரமான வாசனை திரவியமும், வைரம் பாய்ந்த (*Heart Wood*) மரங்களும் உள்ளன. 25 ஆண்டுகள் வயதாகியிருந்தாலும், மரம் எவ்வளவு உயரமாக இருந்தாலும், அதன் தரம்-எடையின் மூலம்தான், அதன் விலை மதிப்பிடப்படுகிறது.

எனவே, தரமான கன்றுகளைத் தேர்வு செய்து நடவு செய்வது அவசியம். கேரளாவுக்கு அடுத்து, கர்நாடகாவில் மைசூரிலும், தமிழ்நாட்டில் திருப்பத்தூரிலும் தரமான சந்தன மரங்கள் உள்ளன. இதன் சந்தை வாய்ப்பும் மதிப்புக்கூட்டலும் விரிவடைய வேண்டும். சந்தன மரத்தின் விற்பனையில் வெளிப்படைத் தன்மை வேண்டும். மாநிலத்துக்கு மாநிலம் சட்டங்களும் விதிமுறைகளிலும் மாறியுள்ளன. எனவே, ஒருங்கிணைந்த சட்ட விதிமுறைகளை அரசு உருவாக்க வேண்டிய நேரமிது.

அடுத்து, செம்மரத்தைப் பற்றிப் பார்ப்போம். செம்மரத்தை அதற்கு வாங்குகிறார்கள், இதற்கு வாங்குகிறார்கள்... எனப் பல கதைகள் சுற்றிக் கொண்டிருக்கின்றன. சீனாவும் ஜப்பானும்தான் செம்மரங்களை வாங்கிக் குவிக்குது. வாஸ்து சாஸ்திரம் சீனாவில் கொடிக்கட்டிப் பறக்கிறது. செம்மரத்தில் செய்த நாற்காலி, உணவு மேஜைகள் வீட்டிலிருந்தால், செல்வம் சேரும் என்ற நம்பிக்கை உள்ளது. இதனால், சீனர்கள் செம்மரத்தை வாங்கி மகிழ்கிறார்கள். ஜப்பானில் இசைக்கருவிகள் செய்யவும், அழகுப் பொருள்கள் செய்யவும் பயன்படுத்தப்படுகிறது.

செம்மரத்தின் பொருள்கள் வீட்டிலிருப்பதைப் பெருமையாகக் கருதுகின்றனர் ஜப்பனியார்கள். அடுத்து, உணவு பொருள்களில் இயற்கை வண்ணத்தைச் சேர்க்கவும், துணிகளுக்குச் சாயம், தலைமுடிக்கு நிறமூட்டவும் செம்மரம் பயன்படுத்தப்படுகிறது. அமெரிக்கா போன்ற மேலைநாடுகளில் புற்றுநோயைக் குணப்படுத்த, செம்மரத்தை மருந்து பொருளாகப் பயன்படுத்தப் படுகிறது என்று சொல்லப்படுகிறது.

நம் மத்திய அரசு சில கட்டுப்பாடுகளுடன் வெளிநாடுகளுக்கு, செம்மரத்தை ஏற்றுமதி செய்யலாம் என்று அண்மையில் அறிவித்துள்ளது. இந்த இனிப்பான செய்திக்குப் பின்னால், மரம் வளர்ப்போர் சங்கத்தினரின் உழைப்பு அடங்கியுள்ளது. செம்மரத்திலும் கவனிக்க வேண்டிய விஷயம் உள்ளது. எல்லா மரங்களையும் ஏற்றுமதி செய்துவிட முடியாது. 25 ஆண்டுகள் வயது ஆனாலும், மரத்தின் அடர்த்தியைப் பொறுத்து, அதாவது, ஒரு கன மீட்டருக்கு 900 கிலோ மேல் அடர்த்தியுள்ள மரங்கள் அதிக சந்தை வாய்ப்பு உள்ளதாகத் தெரியவருகிறது. ஆகையால், இதைக் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.

மேலும், தமிழ்நாட்டில் சிறு குறு விவசாயிகள்தான் அதிகம். இவர்களுக்கும் நல்ல வருமானம் பெற வேண்டும் என்ற நோக்கில், 1 ஏக்கர் நிலத்தில் சந்தனம், செம்மரம் உள்ளிட்ட 36 வகையான பழ வகை, மரவகை, பயிர் வகையினைச் சாகுபடி செய்ய விவசாயிகளை ஊக்கப்படுத்தி வருகிறோம். இதற்காக மேட்டுப்பாளையத்தில் உள்ள, எங்கள் கல்லூரியில் மாதிரிப் பண்ணையை உருவாக்கியுள்ளோம். இந்த நிலத்திலிருந்து ஒரு விவசாயி, தினமும் 550-1,000 ரூபாய் வருமானம் பெற முடியும். இந்தப் பண்ணையைப் பார்வையிட்டு பயன்பெறவும் சந்தனம்-செம்மரச்சாகுபடி குறித்துத் தெளிவாகத் தெரிந்து கொள்ளவும் உங்கள் அனைவரையும் அழைக்கிறேன்" என்று அழைப்புவிடுத்து அவசியமான, அத்தியாவசியமான தகவல்களைச் சொல்லி கைத்தட்டல்களை அள்ளினார், முனைவர் பார்த்திபன்.

வடை பாயாசத்துடன் கல்யாண விருந்துபோல, மதிய உணவு இனிமையாக இருந்துச்சு. இதைவிட இனிமையாக இருந்தது, மதிய அமர்வு. கர்நாடக மாநிலத்தில் சந்தன மரம் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் உதவித்தொகை, சந்தன மரத்திருட்டைத் தடுக்க அம்மாநிலத்தில் செய்யும் அதிநவீன நுட்பம், பாரம்பரிய நுட்பங்கள், மூலிகைப் பயிர்கள் வாரியத்தில் வழங்கப்படும் மானியங்கள் பற்றி முக்கியமான தகவல்கள் குறித்து வல்லுநர்கள் பேசினாங்க.

சந்தன மரம் சாகுபடி செய்யும் முன்னோடி விவசாயி சொல்லிய அனுபவங்களும் சிறப்பா இருந்துச்சு. ஆனா, நம்ம விவசாயிங்க பாதிபேர், உண்ட மயக்கத்தில் ஊருக்குப் புறப்பட்டுப் போயிட்டாங்க. பாதியில் ஊருக்குப் போனவர்களுக்கும் உங்களுக்கும் சேர்த்து, மதிய அமர்வு தகவல்களை, அடுத்த இதழில் சொல்றேன்.



• சந்தன மரத்தில் [illegible]




• கருத்தரங்கில்...

வளம் பெறும். இரண்டு மாநிலங்களின் பொருளாதாரமும் வளர்ச்சி பெறும். நம் விவசாயிகளும் கோடீஸ்வரர்களாக மாறும் நாள் வெகுதூரமில்லை" என்று பூரிப்புடன் பேசினாங்க.

அடுத்து, 'சேண்டல்வுட் சொஸைட்டி ஆஃப் இந்தியா'வின் பொருளாளர் சோமசேகர் பேசும்போது, "சந்தன மரம் சாகுபடி செய்ய விரும்புபவர்களுக்கு இரண்டுவிதமான தயக்கம் இருக்கும். ஒன்று அதை எப்படிப் பாதுகாத்து வளர்ப்பது. இன்னொன்று விற்பனை செய்வதில் பிரச்னை ஏற்படாதா என்பவைதான். சந்தன மரத்தைத் தனியார் நிலங்களில் சாகுபடி செய்யலாம். அதைக் கிராம நிர்வாக அலுவலரிடம் கட்டாயம் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும். சந்தன மரத்தை வெட்டி நேரடியாக விற்பனை செய்யக்கூடாது. வனத்துறைக்குத் தகவல் சொல்லி, அவர்கள் மூலம்தான் விற்பனை செய்ய வேண்டும். மொத்த விலையில் 80 சதவிகிதம் வளர்த்தவருக்கும் 20 சதவிகிதம் அரசுக்கும் பணத்தைப் பிரித்துக் கொடுத்துவிடுவார்கள் வனத்துறையினர். ஆகையால், விற்பனையில் அச்சம் வேண்டாம். சந்தன மரத்தை முறையாக வளர்த்து வந்தால், 15 ஆண்டுகளில் அறுவடை செய்யலாம். இதற்குள் யாரும் அதை வெட்டாமல் பாதுகாக்க வேண்டும். கர்நாடகாவில், சந்தன மரம் சாகுபடி செய்துள்ள தோட்டங்களில் நாய்கள் காவல் காக்கின்றன. சில இடங்களில் பத்து அடி ஆழத்தில் பள்ளம் தோண்டி, அதில், சந்தனத்தை நடவு செய்கிறார்கள். செடி வளர வளர கொஞ்சம் கொஞ்சமாக மண்ணைப் போட்டு மூடி விடுகிறார்கள். இதனால், திருடர்கள் மேல் மரத்தை வெட்டி சென்றாலும் பூமிக்கு அடியில் உள்ள மரம் தப்பிவிடுகிறது.

"யாராவது மரத்தைத் தொட்டால், உடனே அபாய ஒலி எழுப்பிவிடும். உடனே சம்பந்தப்பட்டவர்களின் செல்போன் எண்களுக்கு, 'உங்களின் மரங்களுக்கு ஆபத்து' என எச்சரிக்கை குறுஞ்செய்தியும் சென்றுவிடும்."

தற்போது நவீன தகவல்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தியும் சந்தன மரங்களைப் பாதுகாக்கும் விவசாயிகள் உள்ளனர். எலக்ட்ரானிக் சிப்களை மரங்களில் பொருத்தி விடுகின்றனர். யாராவது மரத்தைத் தொட்டால், உடனே அபாய ஒலி எழுப்பிவிடும். உடனே சம்பந்தப்பட்டவர்களின் செல்போன் எண்களுக்கு, 'உங்களின் மரங்களுக்கு ஆபத்து' என்ற எச்சரிக்கை குறுஞ்செய்தியும் சென்றுவிடும். போலீஸ், வனத்துறையினரின் எண்களைக் கொடுத்திருந்தால், அவர்களுக்கும் தகவல் சென்றுவிடும். இதனால், சந்தன மரத் திருட்டைத் தடுக்க முடியும்.

கர்நாடகாவில் உள்ள வனத்துறை, சந்தன மரம் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்குப் பக்க பலமாக உள்ளது. ஏக்கருக்கு 400 சந்தன மரங்களைச் சாகுபடி செய்யலாம். இதன் மூலம் 15 ஆண்டுகளில் குறைந்தபட்சம் 6 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு வருமானமாகக் கிடைக்கும். இது நான் சொல்லும் கணக்கு அல்ல. அரசு சொல்லும் கணக்கு. சந்தன மரம் (இத்தனை வருஷமா சந்தன மரம் ஒட்டுண்ணி மரம்னு சொல்லிகிட்டிருந்தோம்) துணை விரும்பும் மரம். எனவே, மற்ற மரங்களுடன் சாகுபடி செய்யலாம். மா, கொய்யா போன்ற பழவகை மரங்களுடன் கலப்பு பயிராகச் சாகுபடி செய்யலாம். வரப்பு பயிராகவும் பயிரிடலாம்.

...கணக்கில் வருமானம் எடுக்க முடியும். ...த்தின் மதிப்பைவிட, அதில் வரும் ...ன் மூலம் விவசாயிகள் செல்வந்தர்களாக ...ஆக முடியும்" னு நம்பிக்கையுடன் சொன்னாருங்க.

தமிழ்நாடு மூலிகைப்பயிர்கள் ...த்திலிருந்து வந்திருந்த அதன் அலுவலர் ...சந்திரராஜன், "மூலிகைப்பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானியம் வழங்கி வருகிறோம். சந்தனம், செம்மரம் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 40 சதவிகிதம் மானியம் உண்டு. ஆடாதொடை, ...ம்பு, சிறுகுறிஞ்சான், அவுரி, அரோ... போன்ற மூலிகைப் பயிர்களைச் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மானியம் உண்டு. அதிகபட்சம் 75 சதவிகிதம் வரை மானியம் கொடுத்து வருகிறோம். மூலிகைப் பயிர்களுக்கான மானியத்தைப் பெற அருகில் உள்ள தோட்டக்கலைத்துறை அலுவலகத்தைத் தொடர்புகொள்ளவும் அல்லது எங்கள் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளுங்கள். தொலைபேசி: 044 26222563, இ-மெயில்: ...mpb@gmail.com" என்று தெளிவாகச் சொல்லி வழிகாட்டினாருங்க.

'சேண்டல்வுட் சொஸைட்டி ஆஃப் இந்தியா' தமிழ்நாடு பிரிவு இயக்குநர் ...ரகசெல்வம் (தொடர்புக்கு: 63822 12019) ...டம் பேசும்போது, "சந்தனம்-செம்மரம் ...வரப்பு விவசாயிகளின் வாழ்க்கை தரத்தை ...யர்த்தக்கூடியது. நானும் நாமக்கல் மாவட்டம், ...சிபுரம் அருகில், 20 ஏக்கர் பரப்பளவில் ...பயிர்களைச் சாகுபடி செய்துள்ளேன். அதில் சந்தனமும் அடக்கம். தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகளுக்குச் சந்தன மரம் குறித்த விழிப்பு உணர்வு ஏற்படுத்தவே, இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தோம். நம் பக்கத்து மாநிலமான கர்நாடகம் சந்தன மரம் வளர்ப்பில் வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது. நாமும் அவர்களுடன் இணைந்து வேகமெடுப்போம். இதன் மூலம் சந்தனம் மணப்பதைப்போல, விவசாயிகளின் வாழ்க்கையும் மணக்கும். சந்தன மரம் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு துணையாக இருக்கவே, எங்களின் அமைப்பு உருவாக்கப்பட்டது" னு ...மொழிகளைச் சொன்னாருங்க.

பசுமை விகடன்



அதிரடிச் சலுகை
ஆண்டு சந்தா
~~₹480~~ ₹400

சந்தா தொகையை ANANDA VIKATAN PUBLISHERS PVT LTD என்ற பெயரில் சென்னையில் மாற்றத்தக்க வகையில் Payable at Chennai ...

044 66076407

இ-மெயில் முகவரி: subscribe@vikatan.com